# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.88/2025

## அ.சா.5 (LW 6 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு.காளிராஜ்** | **தொழில்** | |
| **த/ பெயர்** | வீராச்சாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **20.07.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் சிதம்பரனார் தெருவில் குடியிருந்து ஜவுளி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கில் இறந்த சூர்யபிரகாஷ் எங்கள் பகுதியை சேர்ந்தவர்தான். சூர்யபிரகாசை கொலை செய்து விட்டதாக எங்கள் பகுதியில் பேசிக் கொண்டார்கள், அதை கேள்விப்பட்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்று பிணவறையில் சூர்யபிரகாசை பார்த்தேன். தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலிசார் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநீயம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலிசார் விசாரணையில் கடந்த 19.03.2019 அன்று நான் திண்டுக்கல் சோலைஹால் ரோட்டில் சிதம்பரனார் தெருவில் குடியிருந்து வந்ததாகவும் , அதே சமயம் ஆதிதமிழர் பேரவையில் திண்டுக்கல் மாவட்ட தலைவராக இருந்து வந்ததாகவும், அச்சமயம் எங்களுடைய தெருவில் குடியிருந்து வந்து பின்னர் பங்காளி மார்க்கெட் சந்தில் குடியிருந்து வந்த செல்வராஜ் மகன் அஜித்குமார் நெட்டுத்தெருவிற்கு அடிக்கடி வந்து தண்ணியடித்து விட்டு வந்து ரவுடித்தனம் செய்ததாகவும், அதை நெட்டுத்தெருவை சேர்ந்த பாண்டியன் மகன் சூர்யபிரகாஷ் தட்டி கேட்டதாகவும் அதனால் இருவருக்கும் ஏற்பட்ட பிரச்சனையை நானும் அருகிலிருந்தவர்களும் சத்தம் போட்டு விலக்கி விட்டதாகவும், பின்னர் 18.03.2019 அன்று இரவு 08.45 மணி சுமாருக்கு நானும் நெட்டுத் தெருவை சேர்ந்த சடையன்

மகன் செல்வமும் சொந்த வேலையாக நெட்டுத் தெருவில் உள்ள போஸ் கடை அருகில் நடந்து சென்ற போது அங்கு அஜித்குமாரும், நெட்டுத்தெருவை சேர்ந்த தமிழ்மணி என்ற விக்னேசும் பின்னால் பெயர், விலாசம் கேட்டுத் தெரிந்து கொண்ட மாலைப்பட்டியை சேர்ந்த சேதுராமன் மகன் ஜெகன் என்ற ஜாக் ஆகிய மூன்று பேரும் ஒரு பைக்கை வைத்துக் கொண்டு ஒரு மாதிரியாக பேசிக் கொண்டிருந்ததாகவும், நானும் செல்வமும் அருகில் சென்ற போது எங்களைப் பார்த்தவுடன் அவர்கள் பேச்சை அப்படியே நிறுத்தி விட்டதாகவும், அப்போது நாங்கள் எங்களுக்குள் இந்நேரத்தில் இந்த பசங்கள் ஒருமாதிரியாக பேசிக் கொண்டு நிக்கிறாங்க, என்ன செய்ய போறாங்களோ என பேசிக் கொண்டு சென்றதாகவும், பின்னர் 18.03.2019 அன்று இரவு 09.45 மணி அளவில் நான் வீட்டிலிருந்த போது என் கட்சிக்காரப் பையன் ஒருவர் வந்து என்னிடம் நெட்டுத் தெருவை சேர்ந்த பாண்டியன் மகன் சூர்யபிரகாஷ் என்ற மாசிலாமணியை அஜித்குமாரும், ஜாக்கும், தமிழ்மணியும் ஆர்எஸ் ரோடு, என்.எஸ் கம்யூனிட்டி ஹால் அருகே வைத்து கொலை செய்து விட்டதாகவும், பெரியாஸ்பத்திரியில் பாடி இருப்பதாகவும் சொன்னார். பின்னர் நான் உடனே புறப்பட்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனை வந்து அவசர சிகிச்சை பிரிவில் இருந்த சூர்யபிரகாஷ் என்ற மாசிலாமணியை பார்த்த போது அவர் முகம், தலை, கழுத்து, கை, கால்களில் குத்துக் காயத்துடன் இரத்த வெள்ளத்தில் இறந்த நிலையில் இருந்ததாகவும், அதன்பிறகுதான் அஜித்குமார், ஜெகன் என்ற ஜாக், தமிழ்மணி ஆகிய 3 பேரும் நெட்டுத்தெருவில் உள்ள போஸ் கடை முன்பு சூர்யபிரகாஷ் என்ற மாசிலாமணியை கொலை செய்யத்தான் திட்டம் போட்டு பேசிக் கொண்டிருந்தார்கள் என தெரிந்ததாகவும் போலிசார் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது எதிரிகளை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.**

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.07.21 20:45:01 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.